KCC - Examination Unit

# தி/கிண்/கிண்ணியா மத்திய கல்லூரி - (தே.பா)

# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் 10

சுட்டெண் .......................................

## இஸ்லாம்

நேரம் : 3 மணித்தியாலங்கள்

### பகுதி I

- **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இ.்.லாஸ் என்ற சொல்லின்
   1) வெற்றிக்கான வழி  2) தூய்மையான எண்ணம்
   3) ஈமானின் அடையாளம்  4) நற்பண்புகள்

2. அகீதாவுக்கு முரணான கொள்கைகளுள் உள்ளடங்காதோர்
   1) கதரிய்யா  2) முர்ஜஆ
   3) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ  4) மு.்.ஸிலா

3. ஷீத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை
   1) 10  2) 50  3) 30  4) 40

4. "நபியே உமது ஆடைகளை தூய்மையாக வைத்திருப்பீராக" எனும் கூற்று
   1) ஹதீஸ்  2) ஸஹாபாக்களின் கூற்று
   3) அல்குர்ஆனின் கூற்று  4) இமாமின் கூற்று

5. தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்
   1) கடுமையான நஜீஸ்  2) இலகுவான நஜீஸ்
   3) சாதாரண நஜீஸ்  4) மேற்கூறிய எதுவுமில்லை

6. உள்ளத்தோடு தொடர்பான இபாதத்
   1) தொழுகை  2) ஸக்காத்  3) இஹ்லாஸ்  4) ஹஜ்

7. இப்திராஷ் இருப்பு என்பது
   1) கடைசி அத்தஹிய்யாத் இருப்பு  2) நடு இருக்கு
   3) நிலைக்கு வருதல்  4) தாமதித்தல்

8. பர்ளு ஐனுக்கு உதாரணமாக அமைவது
   1) ஜனாஸாத் தொழுகை  2) மார்க்க அறிஞர்களை உருவாக்குதல்
   3) குடும்பப் பராமரிப்பு  4) விஞ்ஞானிகள்

9. ஈமான் கொண்டவருக்கும், ஈமான் கொள்ளாதவருக்குமான பிரிகோடாக அமைவது,
   1) ஸக்காத்  2) தொழுகை  3) ஹஜ்  4) ஈமான்

10. கழாகத்ர் பற்றிய நம்பிக்கை எப்பிரிவின் உள்ளடங்குகின்றன.
    1) அந்நுபுவ்வாத்  2) அல் இலாஹிய்யாத்
    3) அர்ருஹானிய்யாத்  4) அஸ்ஸம் இய்யாத்



kalvi.lk

11. ஈமானுக்கு நேர் எதிரான சொல்
    1) குப்ர்    2) ஷிர்க்    3) நிபாக்    4) ரித்தத்

12. அர்-ரூஹானிய்யத் எனும் பிரிவில் அடங்கும் நம்பிக்கை சார்ந்த விடயங்கள்
    1) அல்லாஹ் பற்றி நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்கள்.
    2) வேதங்கள் பற்றி நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்கள்.
    3) சட உலகிற்கும், புலன்களுக்கும் அப்பாற்பட்ட விடயங்கள்.
    4) மறுமை பற்றிய நம்பிக்கை

13. தயம்முமின் உறுப்புக்கள்
    1) முகமும் இரு கால்களும்
    2) முகமும் இரு மணிக்கட்டு வரையான கைகளும்
    3) முகமும் தலையும்
    4) முகமும் மணிக்கட்டு உட்பட இரு கைகளும்

14. அல்குர்ஆனில் உள்ளத்தின் மூன்று நிலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் “நப்ஸுல் லவ்வாமா என்பது
    1) இச்சைக்கு அடிமைப்பட்ட மனம்    2) திருப்தியடைந்த மனம்
    3) தீமையை ஏவும் மனம்    4) இச்சைக்கு எதிராக போராடும் மனம்

15. அல்-இமாரத் என்ற பதம்
    1) அல்லாஹ்வை வணங்கி வழிபடல்    2) பூமியை வளப்படுத்தல்
    3) அல்லாஹ்வின் பிரதிநிதி    4) அல்லாஹ்வின் நாட்டம்

16. பெருந் தொடக்கை ஏற்படுத்தாத செயல்
    1) விந்து வெளிப்படல்    2) ஹைல், நிபாஸ் ஏற்படல்
    3) முஸ்லிம் மரணித்தல்    4) மதி வெளிப்படல்

17. ஸூரா அந்நாஸில் காணப்படும் வசனங்கள்
    1) 05    2) 06    3) 09    4) 11

18. ஸஜ்தாவுடைய உறுப்புக்கள்
    1) 07    2) 06    3) 08    4) 02

19. அன்றாட செயற்பாடுகளை இபாதத்தாக மாற்றுவற்குரிய நிபந்தனைகளில் அடங்காத விடயம்.
    1) தூய எண்ணம்
    2) ஷரீஆவின் வரையறைகளை மீறாது இருத்தல்
    3) அடியார்களின் திருப்திக்கு உட்பட்டிருத்தல்
    4) அடிப்படை வணக்கங்களுக்கு தடையில்லாதிருத்தல்

20. சதாரண நஜீஸிற்கு உதாரணமாக அமைவது
    1) எறும்பு, தேனி    2) பிராணிகளின் இறந்த உடல்
    3) தாய்ப்பால்    4) நான், பன்றி

(20 x 2 = 40 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. சுருக்கமான விடை தருக.
    1) தொழுகையில் ஓதப்படும் பர்ளான ஓதல்கள் ஒன்றைக் குறிப்பிடுக.
    2) இய்யாக ந∴புது வஇய்யாக்க நஸ்தஈன் என்பதன் பொருள் யாது?
    3) ஸுன்னத்தான விடயங்கள் 02 ஐக் குறிப்பிடுக.
    4) வார்த்தையோடு தொடர்பான இபாதத்துக்கள் 02 ஐக் குறிப்பிடுக.
    5) கடுமையான நஜீஸ் ஒருவரது ஆடையில் படிந்துவிட்டால் அதனை நீக்க என்ன செய்ய வேண்டும்?
    6) ஜபீரத் என்றால் என்ன?
    7) தயம்முமின் நிபந்தனைகளில் ஒன்றைக் குறிப்பிடுக.
    8) அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவை சார்ந்த இமாம்களில் ஒருவரைக் குறிப்பிடுக.
    9) இஸ்லாமிய நம்பிக்கைகளை தொகுத்து கூறும் கலை என்ன?
    10) மறுமை நாள் தொடர்பான நிகழ்வுகளுள் ஹிஸாப் என்பதன் பொருள்?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. 1) இஸ்லாமிய பரிபாசையில் அகீதா என்றால் என்ன?
    2) அகீதாவுக்கு முரணான கொள்கைகள் 03 ஐக் குறிப்பிடுக.
    3) அகீதாவின் உள்ளடக்கத்தினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. 1) பின்வரும் அரபுச் சொற்களின் பொருளைத் தருக?

| | |
|---|---|
| 1. தக்பீர் தஹ்ரீமா | 2. தவர்ருக் |
| 3. இ∴திதால் | 4. இஸ்திப்தாஹ் |

    2) ஸுஜூதின் போது நிலத்தில் படவேண்டிய உறுப்புக்கள் எத்தனை? அவை எவை?
    3) தொழுகையின் இம்மைப் பயன்கள் 03 ஐயும் மறுமைப் பயன்கள் 03 ஐயும் குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. 1) சுத்தம் பற்றிக் கூறும் அல்குர்ஆன் வசனமொன்றைக் குறிப்பிடுக.
    2) நீரின் வகைகள் எத்தனை? அவை எவை?
    3) அல்மாஉத் தாஹுர் பற்றி உதாரணங்களுடன் குறிப்பிடுக. அவற்றின் வகைகளுள் ஒன்றை சுருக்கமாக தெளிவுபடுத்துக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

05. 1) நஜீஸின் வகைகள் எத்தனை அவை எவை?

2) இலகுவான நஜீஸிற்கு உதாரணம் குறிப்பிடுக?

3) சாதாரண நஜீஸிற்கு 03 உதாரணங்கள் குறிப்பிட்டு சாதாரண நஜீஸினை சுத்தம் செய்யும் முறையினை குறிப்பிடுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06. 1) இஸ்லாமிய பரிபாசையில் இபாதத் என்றால் என்ன?

2) நாளாந்த செயற்பாடுகளை இபாதத்தாக மாற்றுவதற்கான நிபந்தனைகள் 03 ஐக் குறிப்பிடுக?

3) பின்வரும் சொற்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக?

1. பர்ளு ஐன்
2. பர்ளு கிபாயா
3. ஸுன்னத்

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07. 1) தொழுகையின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் ஹதீஸ் ஆதாரமொன்றைக் குறிப்பிடுக.

2) தொழுகையின் பர்ளான ஓதல்கள் 03 ஐக் குறிப்பிடுக?

3) தொழுகை எவ்வாறு சுவனம் செல்லக் காரணமாக அமைகின்றது என்பதைக் கூறுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457